செ.வெ.எண்: 719 நாள்: 24.10.2019

**புதுக்கோட்டையில் அர்பன் மெகா பட்டாசு கடையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.**

---

புதுக்கோட்டை நகராட்சி, சின்னப்பா பூங்கா அருகில் அர்பன் கூட்டுறவு பண்டகசாலையின் மெகா பட்டாசு கடையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (24.10.2019) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சி மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.டி.சாந்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பின்னர் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

தீபாவளி திருநாளை முன்னிட்டு கூட்டுறவுத்துறையின் அர்பன் கூட்டுறவு பண்டக சாலையின் சார்பில் மெகா பட்டாசு கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த பட்டாசு கடையில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற வகையில் பல்வேறு வகையான பட்டாசுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு அர்பன் பண்டகசாலை மற்றும் சின்னப்பா பூங்கா அருகில் உள்ள மெகா பட்டாசு கடையின் மூலம் ரூ.60 லட்சத்திற்கு பட்டாசுகள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே பொது மக்கள் அர்பன் பட்டாசு கடைகளில் தரமான பட்டாசுகளை வாங்கி தீபாவளி பண்டிகையை பாதுகாப்பான தீபாவளியாக கொண்டாட வேண்டும். மேலும் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை நகராட்சி, காமராஜாபுரம் 12 ஆம் வீதியில் அர்பன் கூட்டுறவு பண்டக சாலையின் புதிய பகுதி நேர நியாய விலைக் கடையினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், கூட்டுறவுத்துறை துணை பதிவாளர்கள் ராஜேந்திரன், ராமையா, ரியாஷ்அகமது, மத்திய தொலை தொடர்பு ஆலோசனைக் குழு உறுப்பினர் பாஸ்கர், முன்னாள் நகர்மன்ற துணைத் தலைவர் சேட், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் பலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**